IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW6

Defense :

Name : ரமேஷ்

Father's Name : விஜயரங்கன்

Village : அம்பேத்கர் நகர்

Taluk : ஆரணி

Caste :

Calling : பழக்கடை

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2025.

**முதல் விசாரணை**

1. **எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

2. நான் தற்போது நெம்பர் 88 அம்பேத்கர் நகர் ஆரணியில் குடியிருந்து வருகிறேன். பழக்கடை வைத்துள்ளேன். எதிரி அன்புவேலை எனக்கு தெரியும். 20.03.2021 அன்று இரவு 07.30 மணிக்கு எதிரி அன்புவேல் ஆரணியில் இருப்பதாக எனக்கு தெரியவந்தது. என் மாமா தர்மலிங்கம் ஆரணியில் உள்ளார். அவரிடம் சொல்லி எதிரியை பார்ப்பதற்காக நானும் தர்மலிங்கமும் சைதாப்பேட்டைக்கு சென்றோம்.

3. நாங்கள் சென்று கொண்டிருந்த போது சைதாபேட்டை பஸ் ஸ்டேன்ட் அருகில் போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. ஜீப்பின் வெளியே எதிரி அன்புவேல் நின்று கொண்டு இருந்தார். போலீசார் எதிரியை விசாரித்து கொண்டு இருந்தார்கள். அப்போது அன்புவேல் தான் பூங்காவனத்தை அடித்து விட்டதாகவும் அடிக்க பயன்படுத்திய கட்டையை அங்கேயே போட்டு விட்டு வந்துவிட்டேன் என்றும் போலீசாரிடம் சொன்னார். போலீசார் எதிரி சொன்னதை தட்டச்சு செய்தார்கள்.

4. போலீசார் எதிரியை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலத்தில் என் முன்னிலையிலும் மற்றும் தர்மலிங்கம் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்

நானும் தர்மலிங்கமும் சாட்சி கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என் சாட்சி கையெழுத்து மட்டும் **அ.தா.சா.ஆ**7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் சைதாபேட்டை பஸ் ஸ்டேன்டில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் சைதாபேட்டை பஸ் ஸ்டேன்ட் அருகில் 07.30 மணிக்கு சென்ற போது போலீசார் எதிரியை கைது செய்து இருந்தார்களா என்றால் கைது செய்தார்களா என்று தெரியாது. ஆனால் எதிரி ஜீப் அருகே நின்று கொண்டு இருந்தார். போலீசார் அவரை விசாரித்து கொண்டு இருந்தார்கள்.

2. போலீசார் எதிரியையும் என்னையும் என் மாமா தர்மலிங்கத்தையும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்வதற்காக காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து காவல் நிலையத்தில் தான் எதிரியிடமும் என்னிடமும் தர்மலிங்கத்திடமும் கையெழுத்து பெற்றார்கள் என்றால் இல்லை.

3. ஒப்புதல் வாக்குமூலம் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. அதை ஜீப்பிற்குள் இருந்த பிரின்டர் மூலம் பிரின்ட் எடுத்தார்கள். நான் பஸ் ஸ்டேன்டிற்கு சென்ற பிறகு என் முன்னிலையில் எதிரி தான் ஒப்புதல் வாக்குமூலம் தரப்போவதாக சொன்னாறா என்றால் இல்லை.

4. நான் சொல்வது போல் எதிரி பஸ் ஸ்டேன்ட் அருகில் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதை போலீசார் தயாராக எடுத்து வந்த மடிக்கணினியில் தட்டச்சு செய்து பிரின்டரில் பிரின்ட் எடுக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் தான் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டு அங்கு வைத்து தான் எதிரியிடமும் என்னிடமும் தர்மலிங்கத்திடமும் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

5. எனக்கும் தர்மலிங்கத்திற்கும் எதிரி சீட்டு பாக்கி தர வேண்டி உள்ளது என்றால் சரிதான். அந்த சீட்டு பாக்கி தற்போது பைசல் ஆகி விட்டதா என்றால் இல்லை. சீட்டு பாக்கியை வசூல் செய்வதற்காக எதிரி மீது நான் எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரிதான்.

6. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தான் அடிக்க பயன்படுத்திய உருட்டு கட்டையை போட்டுவிட்டு வந்ததாக சொன்னதன் அடிப்படையில் அது குறித்து எங்கு உருட்டு போடப்பட்டது என்று போலீசார் என் முன்னிலையில் எதிரியிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

7. நான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு செல்வதற்கு முன்பே போலீசார் எதிரியை கைது செய்து புகாரை பெற்று சம்பவத்தின் போது பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதத்தை கைப்பற்றி தயாராக வைத்திருந்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தவிர்க்க வேண்டி ஒரு பொய்யான புகார் பெறப்பட்டது என்றும் எதிரி எனக்கு சீட்டு பாக்கி தர வேண்டி இருந்ததால் எதிரிக்கு எதிராக நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தர வில்லை என்றால் சரியல்ல.